செய்தி வெளியீடு எண்: 581 நாள் : 18.11.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.11.2015 அன்று தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை சார்பில் 101 கோடியே 77 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகங்கள், கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி நிலையக் கட்டடங்கள், மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், மீன் விற்பனைக்கூடம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய கட்டடம், விடுதிக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாகப்பட்டினத்தில் புதிதாக கட்டப்படவுள்ள மீன்வளப் பொறியியல் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகளை நன்கு பராமரித்திடவும், மேம்பட்ட தரமான மருத்துவ சிகிச்சை கால்நடைகளுக்கு அளிக்கவும், இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருவாரூர், விழுப்புரம், அரியலூர், கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், கரூர், மதுரை, நாமக்கல், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருவள்ளூர், வேலூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், சேலம், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 900 கிராம பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த சுமார் 7 லட்சத்து 50 ஆயிரம் கால்நடைகளும், விவசாயப் பெருங்குடி மக்களும் பயனடையும் வகையில், 30 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அறுவை சிகிச்சை அறை, ஆய்வக அறை, சிகிச்சைக் கூடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 150 கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – பூந்தமல்லியில் 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி நிலையக் கட்டடம்;

நாகப்பட்டினம் மாவட்டம் – பழையாரில் 32 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டமைப்புகளுடன் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகம்;

இராமநாதபுரம் மாவட்டம் – ரோச்மா நகர், கன்னியாகுமரி மாவட்டம் – குறும்பனை மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – எண்ணூர் முகத்துவார குப்பம் ஆகிய இடங்களில் 13 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 மீன் இறங்குதளங்கள்;

திருநெல்வேலி மாவட்டம் – மணிமுத்தாறு, புதுக்கோட்டை மாவட்டம் – தட்டாமணைப்பட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – அசூர், தஞ்சாவூர் மாவட்டம் – அகரபேட்டை, நெய்தலூர் மற்றும் தட்டான்குளம் ஆகிய இடங்களில் 18 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன்விதை பண்ணைகள்; ஈரோடு மாவட்டம் – பவானிசாகரில் 44 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள மீன்குஞ்சு பொறிப்பகம்; தஞ்சாவூர் மாவட்டம் – ஏரிப்புரக்கரையில் 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி இறால் வளர்ப்புப் பண்ணை; தூத்துக்குடியில் 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகக் கட்டடம்; தஞ்சாவூர் மாவட்டம் – தஞ்சாவூரில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மத்திய நாற்றங்கால் புனரமைத்தல் மற்றும் மீன் விற்பனைக் கூடம்;

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் தமிழகத்தின் 25 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் நவீன தொழில் நுட்பங்களை மாவட்ட அளவில் அனைத்து பண்ணையாளர்களும் கால்நடை வளர்ப்போரும் உடனுக்குடன் பெற்று பயனடைந்திட தேவையான வழிகாட்டுதல்களை அளிப்பதே இம்மையங்களின் பணியாகும். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் சொந்த கட்டடங்களில் செயல்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் பெரம்பலூரில் 47 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய கட்டடம்;

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தால் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டம் – பொன்னேரியில் அமைந்துள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழில் முனைவோருக்கான மீன்பதன மையக் கட்டடம் மற்றும்

3 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16,500 சதுர அடி கட்டட பரப்பளவில், 35 மகளிர், 35 ஆண்கள் தங்கும் வசதியுடன், விடுதி காப்பாளர் அறை, அலுவலக அறை, சமையல் அறை, உணவு கூடம் ஆகியவற்றை உள்ளடக்கிய விடுதிக் கட்டடம்;

கன்னியாகுமரி மாவட்டம், பறக்கையிலுள்ள மீன்வளப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கெண்டை மீன் பொரிப்பகம் மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு நிலையக் கட்டடம்;

என மொத்தம் 101 கோடியே 77 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறைகளுக்கான கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாகப்பட்டினத்தில் புதிதாக கட்டப்படவுள்ள மீன்வளப் பொறியியல் கல்லூரிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு டி.கே.எம். சின்னையா, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு பி.வி. ரமணா, தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 18.11.2015